மூத்த தமிழறிஞர் – உலகம் முழுவதும் தமிழ்ப் பணி மேற்கொண்ட

பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் மறைவு!

தமிழறிஞர்கள் – கழகத்தினர் அஞ்சலி!

சென்னை,ஜூலை.5-

மூத்த தமிழறிஞர் உலகம் முழுவதும் தமிழ்ப் பணி மேற்கொண்டவர், தமிழ் மொழிக்காகவே தன் வாழ்நாளை அற்பணித்த தமிழ் பற்றாளர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பேரன்பை பெற்ற பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் (வயது 91) வயது மூப்பு காரணமாக நேற்று (4.7.2025 வெள்ளிக்கிழமை) இரவு 7 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.

பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதையும் தமிழ்மொழியை உலகெங்கும் கொண்டு சென்று பரப்புவதில், தீவிரம் காட்டி செயல் பட்டு வந்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீது பேரன்பு கொண்டவர்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீதும் பேரன்பு கொண்டவராகத் திகழ்ந்தவர். வா.மு. சேதுராமன் அவர்கள் மீதும், முத்தமிழறிஞர் கலைஞர், கழத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் மிகுந்த அன்பு கொண்டிருந்தனர்.

உலக மகாகவி விருது

வா.மு. சேதுராமன் அவர்கள் உலக மகாகவி விருது பெற்றவர். 100 நூல்களை

எழுதியவர். 54 ஆண்டுகாலமாக தமிழ்ப் பணி என்ற பத்திரிகையை நிறுவி நடத்தி வந்தவர். தமிழ் மொழிக்காக - தமிழ்மொழியை உலகம் முழுவதும் பரப்பிட உலகம் முழுவதும் பயணித்தவர்.

1980 ஆண்டு முதல் 30 உலக கவிஞர்கள் மாநாட்டில் பங்கேற்றவர் ஆவார். பன்னாட்டு தமிழறவு மன்றம் நிறுவி உலகம் முழுவதும் 7 மாநாடுகளை நடத்தியவர்.

ஜெர்மன், தாய்லாந்து, மலேசியா, அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் தமிழ் மாநாடுகளை நடத்திய பெருமை கொண்டவர்.

கலைஞர் காவியம் நூல்

அண்மையில் "கலைஞர் காவியம்" நூலை எழுதி கலைஞர் புகழை உலகெங்கும் பரவச் செய்தார்.

எங்கும் தமிழ்

எதிலும் தமிழ்

"எங்கும் தமிழ் - எதிலும் தமிழ்" என்பதை வலியுறுத்தி 32 ஆண்டு காலமாக தொடர்ந்து நடைபயணம் மேற்கொண்டவர். குமரி முதல் சென்னை வரை 1993-ஆம் ஆண்டு நடைபயணம் மேற்கொண்டார்.

திருக்குறளை தேசிய நூலாக்க வலியுறுத்தினார்!

திருக்குறளை தேசிய நூலாக்க வலியுறுத்தி, குமரி முதல் இமயம் வரை ஊர்தி பயணமாகச் சென்று பிரதமர் அலுவலகத்தில் கோரிக்கை மனு அளித்தார். ஒரு இலட்சம் கவிதைகளை ஆக்கியப் பெருமைக்குரியவர்.

சேது காப்பியம்!

"சேது காப்பியம்" 12 காண்டங்களாக எழுதி உலக மகா கவிஞர் என்ற பெருமைக்குரியவர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள்.

விருதுகள்

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் கலைமாமணி விருது, முரசொலி அறக்கட்டளை விருது, திருவள்ளுவர் விருது, இயற் செம்மல் விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்ற பெருமைக் குரியவர் ஆவார்.

தன் மூச்சு முழுவதும் தமிழ்ப் பணியே என்று வாழ்ந்த பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் வயது மூப்பின் காரணமாக நேற்று (4.7.2025 - வெள்ளிக் கிழமை) இரவு 7 மணியளவில் மறைவுற்றார். செய்தியறிந்ததும் கழகத்தினர், தமிழ் அறிஞர்களும் நேரில் சென்று மறைந்த வ.மு.சேதுராமன் அவர்களின் உடல்மீது மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

முரசொலியில் நேற்று வெளியான கவிதை!

நேற்றைய (4.7.2025) முரசொலியில் 'மண்-மொழி-மானம்-காக்கும் முதல்வர், மாட்சி ஆட்சி மீண்டும் மீண்டும் மலர்கவே' என்று கவிதையில் குறிப்பிட்டிருந்தார்.

மறைந்த பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களின் உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக, "தமிழ் பணி, 31/12, சாய்நகர் இணை, காளிகாம்பாள் கோவில் தெரு, சென்னை 92" என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ளது.

மறைந்த பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்களுக்கு வா.மு.சே. திருவள்ளுவர், வா.மு.சே. கவியரசன், வா.மு.சே. ஆண்டவர், வா.மு.சே. மணிகண்டன் என்ற மகன்களும், பூங்கொடி என்கிற ஒரு மகளும் உள்ளனர்.

தமிழ்ப் பணிக்கெனத் தன்னை ஒப்படைத்துக் கொண்ட

தியாகச் சுடர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் புகழ் தமிழுள்ளவரை போற்றப்படும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை,ஜூலை.5-

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் நேற்று இரவு இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

பன்னாட்டுத் தமிழறவு மன்ற நிறுவனர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து சொல்லொணாப் பெருந்துயர் என்னை ஆட்கொண்டது!

இன்றுகூட முரசொலியில், "ஓரணியில் தமிழ்நாட்டின் உரிமை நாட்டுவோம். தமிழர் ஒற்றுமையாய்த் திரண்டெழுந்தே வலிமை காட்டுவோம்!" எனக் கவிதை தீட்டியிருந்த அவர் இப்போது நம்மிடையே இல்லை என்பதைச் சிந்தை ஏற்க மறுக்கிறது.

"தமிழ் தமிழ் தமிழ் என்று தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவே தன்னை ஒப்படைத்திருக்கின்ற ஒரு பெருமகனைக் காண வேண்டுமென்றால், அது பெருங்கவிக்கோ சேதுராமனைத் தவிர வேறு யாரும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை." என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்ட பெருந்தகை அவர்!

தமிழ்நாடு அரசின் கலைமாமணி, திருவள்ளுவர் விருது உள்ளிட்ட பல விருதுகளுக்குச் சிறப்பு சேர்த்த செந்தமிழ்ச் செம்மல்.

தமிழ்ப்பணிக்கெனத் தன்னை ஒப்படைத்துக்கொண்ட அந்தத் தியாகச் சுடர் தனது ஒளியை நிறுத்திக் கொண்டு, வேதனை எனும் இருளில் நம் மனதைத் தவிக்கவிட்டிருக்கிறார்!

ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட கவிதைகள், நூறுக்கும் மேற்பட்ட கவிதை நூல்கள் உள்ளிட்ட படைப்புகளைத் தமிழுலகிற்கு அளித்த பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களது புகழ் தமிழுள்ள வரை போற்றப்படும்!

அன்னாரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர் - உறவினர்கள் - தமிழ்கூறு நல்லுலகின் சான்றோர்கள் - தமிழ்த் தொண்டர்கள் என அனவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் சகோதரர்

அய்யாவு (எ) இராமச்சந்திரன் மறைவு!

இன்று இறுதிச் சடங்குகள் நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 5

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரனின் மூத்த சகோதரர் அய்யாவு என்ற இராமச்சந்திரன் அவர்கள் நேற்று (4.7.2025) இரவு 9 மணியளவில் உடல்நலக்குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அய்யாவு (எ) இராமச்சந்திரன் தென் சென்னை மாவட்ட முன்னாள் தொண்டரணி அமைப்பாளரும் கழகத்தில் தொண்டரணி தொடங்கப்பட்ட நாள் முதல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடன் அனைத்து வெளியூர் பயணங்களிலும் தொடர்ச்சியாக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்.

கழகத்திற்கு எதிராக நடந்த அனைத்து அடக்கு முறைகளுக்கு எதிராக கடைசி வரை கழகம் ஒன்றே வாழ்க்கை என்று வாழ்ந்தவர். கழகம் அறிவித்த அத்தனை போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். அ.தி.மு.க. ஆட்சியில் பல்வேறு அடக்குமுறைகளுக்கு ஆளாகி மனம் தளராமல் கழகத்தில் பணியாற்றியவர். முத்தமிழ் அறிஞர் கலைஞர், கழக தலைவர் தளபதி ஆகியோர்களின் மீது எந்நாளும் மாறாத மரியாதை கொண்டவர்.

அவருடைய இறுதி ஊர்வலம் இன்று எங்களது இல்லமான எண். 121/166 ,1 வது தெரு, நேதாஜி நகர், தண்டையார் பேட்டை, சென்னை 600081, ஆர்.கே. நகர் பகுதி என்ற முகவரியில் இருந்து நடைபெற உள்ளது.

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் சகோதரர்

அய்யாவு (எ) இராமச்சந்திரன் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை. ஜூலை 5-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :-

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். ரவிச்சந்திரனின் மூத்த சகோதரர் அய்யாவு என்ற இராமச்சந்திரன் அவர்கள் நேற்று (4.7.2025) இரவு 9 மணியளவில் உடல்நலக்குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

அன்னாரை இழந்து வாடும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.இரவிச்சந்திரன் மற்றும் அவரது குடும்பத்திற்கும் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி சிறப்புரை!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்– எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. பங்கேற்பு!

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் திருவள்ளூர் மற்றும் திருத்தணி தொகுதிக்குட்பட்ட, BLA 2 பாக முகவர் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் மற்றும் திருத்தணி தொகுதியில் BLA 2 பாக உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ எனது தலைமையில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் முன்னிலையில் கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெறுகிறது இதில் கழக துணை பொதுச்செயலாளரும் மண்டல பொறுப்பாளருமான ஆ.இராச எம்.பி. கலந்துரையாடல் நிகழ்த்துகிறார் சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் - கழக கொள்கை பரப்பு செயலாளர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்.

நாள் & நேரம்	தொகுதி	இடம்
06-07-2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி	திருவள்ளூர்	பாண்டூர் VGR கார்டன்
06-07-2025 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி	திருத்தணி	ஹோட்டல் ஸ்கந்தா பேலஸ் சென்னை திருப்பதி நெடுஞ்சாலை

மேற்கண்ட கூட்டத்திற்கு மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் தொகுதி பார்வையாளர்கள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் BLA 2 பாக உறுப்பினர்கள் அனைவரும் சம்பந்தப்பட்ட தொகுதிகளில் நடைபெறும் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ.,
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. – கலாநிதி வீராசாமி எம்.பி. சிறப்புரை!

45வது வட்டக் கழக பாக முகவர்கள் - நிர்வாகிகள் கூட்டம்!

வட்டச் செயலாளர் ஜி.மாரிமுத்து அறிக்கை!

சென்னை. ஜூலை 5-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி, கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி, சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்கு பகுதி 45 வது வட்டத்தில் பாக முகவர்கள் (B L A - 2) பாக உறுப்பினர்கள் (B L C) மற்றும் (B D A) பாக டிஜிட்டல் ஏஜென்ட் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று (05.07.2025 - சனிக்கிழமை) மாலை 5.00மணியளவில் 45வது வட்டத்தில் பி.வி.காலனி முதல் தெருவில் அமைந்துள்ள ஆன்மீக டிரஸ்ட் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

அது சமயம் பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் க.ஜெயராமன் மற்றும் பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர், கன்னிகை ஜி.ஸ்டாலின் ஆகியோர் முன்னிலையில் 45வது வட்டக் கழக செயலாளர் முரசொலி ஜி.மாரிமுத்து தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ. மற்றும் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி மற்றும் மாநில பொறியாளர் அணிதுணை செயலாளர் இரா. நரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்கின்றனர்.

இதில் மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், 45வது வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், (B L A - 2) பாக உறுப்பினர்கள், (B L C) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் முரசொலி ஜி.மாரிமுத்து தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி 128வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரன் அவர்களின் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து 84 தெருக்களுக்கு புதிய பெயர்ப் பலகைகள் அமைக்கப்பட்டு வருவதை மாமன்ற உறுப்பினர் பார்வையிட்டார் உடன் வட்ட கழக செயலாளர் மு.கோவிந்தராஜன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

கழகத் தலைவர் தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களின் ஆலோசனைப்படி வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வார்டில் நியூ காலணி, பாரதி தெரு, ஆகிய இடங்களில் மக்கள் குறைத்தீர்க்கும் வகையில் மருத்துவ முகாம், கழக தேர்தல் பணிக்குழு செயலாளரும், 177வது வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி பெ.மணிமாறன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் "ஓரணியில் தமிழ்நாடு இல்லம் தோறும் தி.மு.க. உறுப்பினர்கள் சேர்த்தல் மதுரவாயல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அயப்பாக்கம் ஊராட்சியில் ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி ஏற்பாட்டில் மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பி.டி. பாண்டிச்செல்வம் கலந்து கொண்டு உறுப்பினர் சேர்த்தல் முகாமை தொடங்கி வைத்தார். இதில் இரா.வினோத், மாறன்குமார், பா.சிவசங்கர், ஏ.பி.பாபு, பி.பாலாஜி, தேன்மொழி, ஷர்மிளா, செண்பகவள்ளி, அம்பிகா, கிளாரா, மாலா, அர்ச்சனா, ராஜகோபால், மாமாலைவாசன், வேலு, தையல்நாயகி, ரஜினி, கார்த்திகேயன், கோகுல், ஹரிகரன், மகேஸ்வரன் சத்யா, ஆகாஷ், ரேவதி, செல்வம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் இளைஞரணி மற்றும் மாணவர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடு போற்றும் 4 ஆண்டு சாதனைகள் தெருமுனை விளக்க கூட்டம் திருக்கழுக்குன்றம் நென்மேலி ஊராட்சியில் திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சேட்டு (எ) ஆ.பரந்தாமன் தலைமையில் நடைபெற்றது. திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் ம.கடும்பாடி வரவேற்றார். இதில் திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றிய செயலாளர் (ம) தலைமை செயற்குழு உறுப்பினர் வீ.தமிழ்மணி, ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர். டி.அரசு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தையூர் வீ.விஜயகுமார், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இ.மூர்த்தி, என்.இளங்கோ, பி. பன்னீர்செல்வம், இளங்கோ, இ.டில்லி மாணவரணி துணை அமைப்பாளர்கள் பி.சுரேஷ், எஸ்.சஞ்சய், எம்.ஜீவா, என்.மணிமாறன், து.கார்த்திக், எம்.வினோத் குமார் மற்றும் மாவட்டம், ஒன்றியம், கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

'ஓரணியில் தமிழ்நாடு' 99வது வார்டில் கழக உறுப்பினர் சேர்க்கை!

பரிதி இளம் சுருதி எம்.சி. பங்கேற்பு!

சென்னை, ஜூலை 5-

எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வாடுக்கு உட்பட்ட பாகம் எண் : 11க்கு உட்பட்ட பெருமாள் முதல் தெருவில் வீடு வீடுகளாய் சென்று ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை மற்றும் பரப்புரை படிவத்தை 99வது வார்டு வட்ட கழக செயலாளர் திரு. ஆ.எம்.ரங்கநாதன் முன்னிலையில், தி.மு.க அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி முதலாவதாக தன்னை இணைத்துக் கொண்டு பாகத்தில் உள்ள வீடுகள் தோறும் சென்று உறுப்பினர்களை இணைத்து படிவத்தில் கையொப்பம் பெற்றார்.

இந்நிகழ்வில் பாக நிலை முகவர் BLA2 டி.செந்தில் குமார், கழக மூத்த முன்னோடி திரு. புரசை செல்வம் அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளர் ரஹிபுல்லா, சுரேஷ், எம்.விக்னேஷ், சாய் தருண்சுரேஷ், மற்றும் கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.

தி.மு.க. வழக்கறிஞர் அணி

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர் நியமனம்!

தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளராக பொறுப்பு வகித்து வரும் பி.எஸ்.ரமேஷ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **இ.எல்.கண்ணன்** (எண்.10, வானவில் நகர், காஞ்சிபுரம் - 631 501) அவர்கள் **காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளராகவும்;**

மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளராக பொறுப்பு வகித்து வரும் இ.எல்.கண்ணன் அவர்கள் மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்கு பதிலாக **வி.இராமலிங்கம்,** (காரியமங்கலம், காவனூர்புதுச்சேரி அஞ்சல், உத்திரமேரூர் தாலுக்கா, **காஞ்சிபுரம் மாவட்டம்) அவர்கள் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்.**

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 04-07-2025.

என்.ஆர்.இளங்கோ எம்.பி.
செயலாளர்
தி.மு.க. சட்டத்துறை

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இராசிபுரம் கே. இராமசாமி

ஜூலை 5 (2000)

சேலம் மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும், திராவிட இயக்கத்தின ஆரம்ப கால உறுப்பினராகவும் இருந்தவர்.

இராசிபுரம் ஒன்றியம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம் என இரு ஒன்றியங்களில் செயலாளராக இருந்தவர். பேரூர்க் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

இராசிபுரம் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும், தமிழ்நாடு மாநில நிலவள வங்கி இயக்குனநராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் 1999ஆம் ஆண்டு "மாநில சிறந்த கூட்டுறவாளர்" விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.